Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 03 2024 | இதழ் 232

# நந்தனத்தில் நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்க மோடி நாளை சென்னை வருகை: 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு டிரோன்கள் பறக்க தடை



சென்னை, 03 மார்ச் 2024: நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெறும் பாரதீய ஜனதா பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள பிரதமர் நரேந்திர மோடி நாளை சென்னை வருகிறார். இதையொட்டி 15 ஆயிரம் போலீசார் 5 அடுக்கு பாதுகாப்பில் ஈடுபடுகின்றனர். ஏப்ரல் 29 ந்தேதி வரை சென்னையில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி கடந்த 27ம் தேதி திருப்பூர் மாவட்டம் பல்லடத்திற்கு வந்தார். அங்கு, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் 'என் மண்; என் மக்கள்' பாதயாத்திரை நிறைவு விழாவில் பங்கேற்றார். பின் மோடி மதுரை சென்று, அங்கு மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அடுத்த நாள் தூத்துக்குடி மாவட்டத்திற்கு சென்று குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவு தளத்திற்கு அடிக்கல் நாட்டுவது உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்டங்களை துவக்கி வைத்தார். அதன் பின்னர் திருநெல்வேலியில் நடந்த பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

4 நாட்கள் கழித்து திரும்பவும் பிரதமர் மோடி நாளை தமிழகம் வருகிறார். சென்னை நந்தனத்தில் நாளை நடைபெறும் பாரதீய ஜனதா பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்கிறார். இதையொட்டி அவரது பயண திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது.

## கல்பாக்கத்தில்...

பிரதமர் நரேந்திர மோடி நாளை பகல் 1.15 மணிக்கு மராட்டியத்தில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு, சென்னைக்கு மதியம் 2.45 மணிக்கு வருகிறார்.

பின்னர் விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டு, கல்பாக்கம் ஹெலிகாப்டர் தளத்திற்கு வருகிறார். பின்னர் அங்கிருந்து சாலை மார்க்கமாக சென்று மதியம் 3.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை கல்பாக்கம் அணு உலை ரியாக்டர் மேம்பாடு (உற்பத்தி) திட்டத்தை பார்வையிடுகிறார்.

அதனைத்தொடர்ந்து மீண்டும் கல்பாக்கம் ஹெலிபேடு சென்று, அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலமாக மாலை 5 மணிக்கு மீண்டும் சென்னை விமான நிலைய ஹெலிகாப்டர் தளத்துக்கு வருகிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடக்கும் பொதுக்கூட்ட திடலுக்கு மாலை 5.10 மணிக்கு வருகிறார். மாலை 6.15 மணி வரை பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார். கூட்டத்தில் பா.ஜ.க.கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களான வாசன், ஏ.சி.சண்முகம், தேவேந்திரநாதன் யாதவ், ஜான் பாண்டியன் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

கூட்டம் முடிந்ததும், மாலை 6.20 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு சாலை மார்க்கமாக விமான நிலையம் செல்கிறார். மாலை 6.35 மணிக்கு சென்னையில் இருந்து தெலுங்கானா நோக்கி விமானத்தில் அவர் புறப்பட்டு செல்கிறார். தெலுங்கானாவை இரவு 7.45 மணிக்கு சென்றடைகிறார்.

## 5 அடுக்கு பாதுகாப்பு

பிரதமர் சென்னை வருகையையொட்டி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இதனையடுத்து கமிஷனர் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர போலீஸ் கூடுதல் கமிஷனர்கள், இணை துணை உதவி கமிஷனர்கள் , சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து மற்றும் சிறப்பு பிரிவுகளின் போலீஸ் அதிகாரிகள், ஆயுதப்படை, கமாண்டோ, தமிழ்நாடு சிறப்பு காவல் படை போலீசார் உள்பட 15,000 போலீசார் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பிரதமரின் நிகழ்ச்சி நடைபெறும் நந்தனம் ஒய்எம்சிஏ மைதானம், சென்னை விமான நிலையம் மற்றும் சுற்றுப்புறங்களிலும், வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏப்ரல் 29 ந்தேதி வரை டிரோன்கள் பறக்க தடை

மேலும், சென்னையில் உள்ள லாட்ஜுகள், தங்கும் விடுதிகள், நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் விடுதிகளிலும் சோதனைகள் மேற்கொண்டு சந்தேக நபர்கள் உள்ளனரா என கண்காணித்து வருகின்றனர். மேலும், முக்கிய சாலைகள் மற்றும் சந்திப்புகளில் தீவிர வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, சென்னையில் உள்ள முக்கிய ரெயில் நிலையங்கள், பேருந்து முனையங்களிலும் போலீசார் மூலம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். பிரதமர் வருகையையொட்டி சென்னையில் ஏப்ரல் 29 ந்தேதி வரை டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், பிரதமர் வருகை, பாதுகாப்பு காரணமாக தற்காலிக தடைவிதிக்கப்பட்ட டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் சார்பாக எச்சரிக்கப்படுகிறது.

# கமலுக்கு தொகுதி: தி.மு.க. இதுபற்றி எங்களிடம் பேசாதது ஏன்? காங்கிரஸ் காட்டம்



சென்னை, 03 மார்ச் 2024: கமலுக்கு தொகுதி கொடுப்பது பற்றி தி.மு.க. எங்களிடம் எதுவும் சொல்லவில்லை என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிப்பதாக கருதப்படும் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஒரு தொகுதியை ஒதுக்கி கொடுப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது. தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரசுக்கு ஒதுக்கப்படும் தொகுதியிலேயே கமல்ஹாசனுக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகிறது.

இது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வ பெருந்தகை கூறும்போது, அதுபோன்று எந்த விதமான ஒப்பந்தங்களும் போடப்படவில்லை. இதுபற்றி கமல்ஹாசனும் எங்களுடன் எதுவும் பேசவில்லை. அதே நேரத்தில் தி.மு.க. தரப்பிலும் கமல்ஹாசன் கூட்டணியில் இருப்பதை யாரும் உறுதி செய்யாமலேயே உள்ளனர்.

விட்டு கொடுக்க மாட்டோம்

டெல்லியில் உள்ள தலைவர்களுடன் தொகுதிப்பங்கீடு தொடர்பாக தி.மு.க. நிர்வாகிகள் தொலைப்பேசியில் பேசி வருகின்றனர். தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்குள் எந்த சலசலப்பும் இல்லை. தொகுதி பங்கீட்டில் வேறுபாடு இருந்தாலும் அனைவரும் இந்தியா கூட்டணியில்தான் இருப்போம். வெகு விரைவில் சுமுகமாக தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம். 40 தொகுதியையும் எங்களுடையதாக கருதி, தேர்தல் பணியாற்றுவோம். தொகுதி பங்கீடு விவகாரத்தில் இலக்கங்களை விட்டுக்கொடுக்க மாட்டோம் என தெரிவித்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கருத்து தெரிவித்திருந்த தி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவரான டி.ஆர்.பாலு, தி.மு.க. கூட்டணியில் கமல்ஹாசன் இடம் பெறுவது பற்றி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்வார் என்று கூறியிருந்தார். வெளிநாட்டு பயணம் முடிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திரும்பியதும் கமல்ஹாசன் சந்தித்து பேச இருப்பதாகவும் தகவல்கள் வெளியானது. ஆனால் அது தொடர்பான எந்த சந்திப்புகளும் நடைபெறவில்லை.

கமல்ஹாசனை பொறுத்தவரையில் காங்கிரஸ் டெல்லி மேலிட தலைவர்கள் மற்றும் ராகுல்காந்தியுடன் மிகவும் நெருக்கமாகவே இருந்து வருகிறார். இதனால் அவர் காங்கிரஸ் கட்சியுடன் பேசி எளிதாக தனக்கு தேவையான தொகுதிகளை கேட்டுப் பெற்றுக் கொள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கே எத்தனை இடங்கள் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

## 6 தொகுதியா?

காங்கிரஸ் 10 தொகுதிகளை கேட்கும் நிலையில், தி.மு.க.வோ 6 தொகுதிகளை மட்டுமே தருவதாக கூறியிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இப்படி குறைவான தொகுதிகள் கிடைக்கும் பட்சத்தில் அதில் ஒரு தொகுதியை கமல்ஹாசனுக்கு எப்படி ஒதுக்க முடியும் என்று கூறியே காங்கிரஸ் கட்சி 'கை' விரித்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால் கமல்ஹாசனுக்கு ஒரு தொகுதியை ஒதுக்கி கொடுப்பது தி.மு.க.வா? காங்கிரசா? என்கிற கேள்வியும் எழுந்து உள்ளது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

ஞாயிற்றுக்கிழமை,
மார்ச் 03, 2024

## 'ஆசியா புக் ஆப் ரெக்கார்ட்'ஸில் இடம் பிடித்த துபாய் வாழ் தமிழர்களின் 24 மணி நேர தொடர் இசை நிகழ்ச்சி இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரெஹைனா, நடிகை கோமல் ஷர்மா முன்னிலையில் இசை நிகழ்ச்சி நடத்தி உலக சாதனை செய்த துபாய் வாழ் தமிழர்கள்



சென்னை, 03 மார்ச் 2024: நம் தமிழ் மண்ணிலிருந்து அயல்நாட்டு பணிகளுக்காக புலம்பெயர்ந்து சென்றவர்களை உயிர்ப்புடன் வைத்திருப்பது நமது தமிழ்.. தமிழ் கலாச்சாரம்.. தமிழ் இசை ஆகியவை தான்.. அந்த வகையில் தமிழ் சினிமாவின் பாடல்களுக்கு என்று உலக அரங்கில் மிகப்பெரிய வரவேற்பு எப்போதும் உண்டு. ஒரு பக்கம் நம் தமிழ் இசையமைப்பாளர்கள் நாடு கடந்து சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்தி தமிழ் சினிமாவின் மேன்மையை உயர்த்திப் பிடித்து வருகின்றனர். இன்னொரு பக்கம் அயல்நாடு வாழ் தமிழர்கள் நம் தமிழ் பாடல்களுக்கு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்து வருவதுடன், பலரும் தங்களைச் சிறந்த பாடகர்களாக உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

அப்படி துபாயில் வாழும் நம் தமிழ் மக்களும் இப்படி தமிழ் சினிமா இசை மீது கொண்ட காதலால் உலக சாதனை செய்யும் விதமாக பிரமிப்பூட்டும் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தி 'ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்'ஸில் இடம் பிடித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் இசையில் ஆர்வம் கொண்ட துபாய் வாழ் தமிழர்கள் ஒன்றிணைந்து தொடர்ந்து 24 மணி நேரம் 'நான்ஸ்டாப்'பாக திரையிசைப் பாடல்களை பாடி 'ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்'ஸில் இடம்பெற்று உலக சாதனையை படைத்துள்ளனர்..

ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸின் மதிப்பீட்டாளர் விவேக் கூறும்போது, "இதற்கு முன்பு இதேபோன்று 13.5 மணி நேரம் தொடர்ந்து பாடல்கள் பாடியது தான் சாதனையாக இருந்தது. அந்த சாதனையை தற்போது இவர்கள் முறியடித்துள்ளனர்" என்றார்.. இந்த சாதனை நிகழ்ச்சியின் பெருமைமிகு பார்வையாளராக, இதில் பங்கேற்கும் இசைக்கலைஞர்களை உற்சாகப்படுத்தி கௌரவிக்கும் விதமாக இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மானின் சகோதரி ஏ.ஆர்.ரெஹைனா பங்கேற்க, அவரது முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. மேலும் நடிகை கோமல் சர்மா, மக்கள் தொடர்பாளர் கி.ஜான் ஆகியோரும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

பகவதி ரவி, ஸ்ரீ பட், ஆர்ஜே ருபீனா சுபாஷ் ஆகியோர் இந்த நிகழ்வை அழகாக ஒருங்கிணைத்தனர். இதில் பகவதி ரவி, தியாகு, பாலாஜி, ராகேஷ், அஜய், விக்னேஸ்வரன், ஜெகநாதன், பத்மினி, வள்ளி ரவி, மிருதுளா பாலகிருஷ்ணன், சரண்யா, ஜனனி, ஜெய்ஸி மஜோலி, சரண்யா உள்ளிட்ட 15 பாடகர்கள் இந்த சாதனை நிகழ்ச்சியில் பங்கேற்று பாடி ரசிகர்களைப் பரவசப்படுத்தினார்கள்.

துபாயில் செய்யப்பட்ட இந்த இருபத்தி நான்கு மணி நேர தொடர் கரோகி பாடல் சாதனையை முறியடிக்க இன்னும் பல வருடங்கள் ஆகலாம் என்றும் பேசப்பட்டது.

## பெங்களூரு குண்டு வெடிப்பு வழக்கு: தமிழ்நாடு உள்பட 3 மாநிலங்களில் குற்றவாளியை பிடிக்க தேடுதல் வேட்டை

சென்னை, 03 மார்ச் 2024: பெங்களூரு ஓட்டலில் குண்டு வைத்த நபரை பிடிக்க தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா ஆகிய 3 மாநிலங்களிலும் போலீசார் முகாமிட்டு தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பெங்களூருவில் உள்ள பிரபலமான ராமேஸ்வரம் கபே என்ற ஓட்டலில் நேற்று முன்தினம் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் பெண்கள் உள்பட 10 பேர் படுகாயம் அடைந்திருந்தார்கள்.

ஓட்டல் மற்றும் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் சந்தேகப்படும்படியான ஒரு நபர் நடமாட்டம் குறித்த படங்கள் பதிவாகி உள்ளன. அதில், சந்தேக நபர் ஒரு பையுடன், தொப்பி மற்றும் மாஸ்க் அணிந்து நடந்து செல்வதும் கைக்கடிகாரத்தை பார்ப்பதும் தெரிகிறது. எனவே, அந்த நபர் ஓட்டலுக்குள் குண்டு வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணை நடைபெறுகிறது.

குற்றவாளியின் நடமாட்டம் சி.சி.டி.வி. கேமராக்களில் பதிவாகியிருப்பதால் விரைவில் அவர் கைது செய்யப்படுவார் என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக உபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. அதேநேரத்தில் என்.ஐ.ஏ. (தேசிய புலனாய்வு முகமை) அதிகாரிகள், பயங்கரவாத செயல்களை தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு படையினர், மத்திய உளவுத்துறை அதிகாரிகள் குண்டுவெடிப்பு சம்பவத்தை தீவிரமாக எடுத்து கொண்டு மற்றொரு புறம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஓட்டலில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவத்திற்கு சிரியா நாட்டை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பு இருக்கலாம் என்ற முடிவுக்கு போலீசார் வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுவரை ஓட்டல் குண்டுவெடிப்புக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

ஒருபுறம் ராமேஸ்வரம் கபே ஓட்டலில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு காரணம் யார்?, பின்னணியில் இருப்பவர்கள் யார்? என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மற்றொரு புறம் ஓட்டலில் வெடிகுண்டை வைத்துவிட்டு சென்ற நபரை பிடிக்க தனிப்படை போலீசார் தீவிரம் காட்டி வருகிறார்கள். இதற்காக ஒரு தனிப்படை போலீசார் அண்டை மாநிலங்களில் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியுள்ளனர். அதாவது தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா ஆகிய 3 மாநிலங்களிலும் போலீசார் முகாமிட்டு ஓட்டலில் குண்டு வைத்த நபரை பிடிக்க தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

## தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தமிழ் சினிமா வர்த்தக கையேட்டை இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டார்



சென்னை, 03 மார்ச் 2024: திரையுலகில் செயலாற்றி வரும் 250க்கும் மேற்பட்ட தயாரிப்பாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ் திரைப்படத்துறையின் நலனுக்காக பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வரும் தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கம், தமிழ் சினிமா வர்த்தக கையேடு எனும் தகவல் களஞ்சியத்தை முதல் முறையாக உருவாக்கியுள்ளது.

சாட்டிலைட், டிஜிட்டல், பிற மொழி டப்பிங், வெளிநாட்டு மற்றும் இந்திய திரையரங்கு உரிமைகளை வாங்குவோர்களை தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் எளிதில் சென்றடையும் நோக்கில் இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கையேட்டின் மூலம் தமிழ் தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களைப் பற்றிய தகவல்களை எளிதாக பரப்புவதோடு, தயாரிப்பு செலவுகளை குறைக்க முடியும்.

வெளிப்புற யூனிட் செலவுகள், பல்வேறு நகரங்களில்/வெளிநாட்டில் படப்பிடிப்பிற்கு கிடைக்கும் மானியம், பிற மொழிகளில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள், மாற்றங்கள் உள்ளிட்ட தகவல்கள் இந்த கையேட்டில் இருப்பதால், தயாரிப்பு செலவைக் குறைக்க இது உதவுவதுடன். தயாரிப்பாளர்களின் விழிப்புணர்வுக்காக□ தொழில்நுட்ப முன்னேற்றங்கள், வரவிருக்கும் படங்களின் வெளியீட்டு அட்டவணை, தொழில்துறை தகவல்கள், வெற்றிகரமான திரைப்படங்கள் குறித்த□ ஆய்வுகள், பழம்பெரும் தயாரிப்பாளர்கள் குறித்த தற்போதைய தகவல்கள், விளம்பரங்கள் உள்ளிட்டவற்றை தாங்கி வருகிறது.

மொத்தத்தில், தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களை விற்க சரியான ந□பவர்களை அணுகவும், திரைப்படங்களின் பல்வேறு உரிமைகளை வாங்குபவர்கள் குறித்து தெரிந்துகொள்ளவும் இக்கையேடு உதவும். மாதாந்திர இதழாக அச்சிலும் டிஜிட்டல் வடிவத்திலும் தமிழ் சினிமா வர்த்தக கையேடு வெளியிடப்படும். திரைப்படங்களின் உரிமை குறித்த தகவல்களை தெரிவிக்க, 'பொது அறிவிப்பு' விளம்பரங்களை வெளியிடவும் இது பயனுள்ளதாக இருக்கும்.

மாநிலம் முழுவதும் உள்ள திரையரங்கு விநியோகஸ்தர்கள், ஹிந்தி டப்பிங் உரிமையை வாங்குபவர்கள், பிற மொழி (தெலுங்கு) உரிமைகளை வாங்குபவர்கள், தென்னிந்திய□ சாட்டிலைட் சேனல்கள், டிஜிட்டல்/ஓடிடி தளங்கள், வெளிநாட்டு உரிமைகளை வாங்குபவர்கள், ஆடியோ/இசை நிறுவனங்களுக்கு தமிழ் சினிமா வர்த்தக வழிகாட்டி அனுப்பப்படும். திரைப்பட வணிக சேவைகளை வழங்கும் ஸ்டூடியோக்கள், வெளிப்புற யூனிட்டுகள், டிஐ, வி எஃப் எக்ஸ், டிஐ டி, க்யூப்/டிஜிட்டல் சேவை, போஸ்ட்□ புரொடக்ஷன் நிறுவனங்களுக்கும் பிரதிகள் அனுப்பப்படும்.

அதிகாரப்பூர்வ தொழில்துறை சங்கத்திலிருந்து வெளிவரும் பிராந்திய சினிமாவின் முதல் வர்த்தக வழிகாட்டியாக இது இருக்கும். சங்கதிற்கு சொந்தமான இந்தக் கையேடு எந்த தனி நபருக்கும் உரிமையானதல்ல. உறுப்பினரகளுக்கும் பல்வேறு உரிமைகளை வாங்குபவர்களுக்கும் இலவசமாக இது வழங்கப்படும்.

வர்த்தக வழிகாட்டியின் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான எந்தவொரு ஆலோசனையையும்/கருத்தையும் வரவேற்கிறோம். உங்கள் மதிப்புமிக்க கருத்துகளை tfapa2020@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களுக்கு எழுதவும்.

தமிழ் சினிமா வர்த்தக வழிகாட்டியை சங்கத்தின் தலைவர் 'இயக்குந□ர் இமயம்' திரு பாரதிராஜா பல முக்கிய தயாரிப்பாளர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களின் முன்னிலையில் வெளியிட்டார்.

## கும்மிடிப்பூண்டி ஏரிபேட்டையில் ரூ.2 கோடியில் நவீன எரிவாயு தகன மேடை: அமைச்சர் காந்தி திறந்து வைத்தார்



சென்னை, 03 மார்ச் 2024: திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்முதலம் பேடு ஊராட்சி ஏரிபேட்டையில் நேற்று கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியத்திலிருந்து ரூ.2 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடையினை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமா மகேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் ஒ.என்.சுகபுத்ரா ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு கீழ் முதலமைச்சரே ஊராட்சி ஏரிபேட்டை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியம் திட்டம் 2021 2022 ம் ஆண்டு ரூ.1,93,20,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை, குளியலறை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இந்த நவீன எரிவாயு தகன மேடையினை சுற்றுவட்டத்திற்கு உட்பட்ட 10 ஊர் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்வார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்ட அலுவலர் முருகன், கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிழ்த மன்னன், சந்திரசேகர், ஊராட்சி மன்ற தலைவர் கோ. நமச்சிவாயம் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தமிழகம் முழுவதும் 43 ஆயிரம் மையங்களில் இன்று போலியோ சொட்டு மருந்து முகாம் 57 லட்சத்து 87 ஆயிரம் குழந்தைகள் இலக்கு




சென்னை, 03 மார்ச் 2024: சென்னை உள்பட தமிழகம் முழுவதும் 43 ஆயிரத்து 51 மையங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் இன்று காலை தொடங்கியது. 57 லட்சத்து 87 ஆயிரம் குழந்தைகளுக்கு போட திட்டமிட்டப்பட்டுள்ளது.

சென்னை திரு.வி.க. நகரில் நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாமை அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கினார். சென்னை மாநகராட்சி மேயர் பிரியா குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்.

சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், பல்லாவரத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைத்தனர்.

இதேபோல தமிழகம் முழுவதும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்களில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட கலெக்டர்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மன்ற தலைவர்கள் துவக்கி வைத்தனர்.

குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டதை உறுதி செய்ய இடது கை சுண்டு விரலில் அடையாள மை வைக்கப்பட்டது.

ரெயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் 43 ஆயிரத்து 51 மையங்களில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை 57 லட்சத்து 84 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாளில் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும். அண்மையில் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் அன்று சொட்டு மருந்து கொடுப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. மேலும் போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் டாக்டர்கள், மருத்துவமனைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நடமாடும் குழுக்கள் மூலமாக தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க வழிவகை செய்யப்பட்டிருந்தது. சொட்டு மருந்து மையங்களில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதார பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

போலியோ இல்லாச் சமுதாயம் தொடர...

முன்னதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப்பதிவில், ‘அன்பார்ந்த பெற்றோர்களே ஓர் வேண்டுகோள். போலியோ இல்லாச் சமுதாயம் தொடர, இன்றைய போலியோ சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தவறாமல் சொட்டு மருந்து வழங்குங்கள்.

நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி என்று கூறியிருந்தார்.

புதுச்சேரி...

புதுவை மாநிலத்தில் 5 வயதுக்குட்பட்ட 81,334 குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாம் இன்று நடைபெற்றது. புதுவை கதிர்காமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி முதலமைச்சர் ரங்கசாமி முகாமை துவக்கி வைத்தார்.

# ஏர் இந்தியா இந்திய கிளாசிக்கல் மற்றும் நாட்டுப்புற நடன வடிவ கலைகளைக் கொண்டாடும் வகையில் விமான பயண பாதுகாப்பு குறித்த புதிய இன்ஃப்லைட் பாதுகாப்பு வீடியோவை அறிமுகப்படுத்துகிறது!

சென்னை, 03 மார்ச் 2024: இந்தியாவின் உலகளாவிய விமான சேவையில் முன்னணி வகிக்கும் நிறுவனமான ஏர் இந்தியா, விமானப் பயணத்தின் போது பயணிகளுக்குக் காட்டப்படும் பாதுகாப்பான பயணம் குறித்த புதிய விழிப்புணர்வு காணொலியை 'சேஃப்டி முத்ராஸ்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்தியாவின் துடிப்புமிக்க கலாச்சாரத்தின் செழுமையான மரபுகளுடன், பாதுகாப்பு வழிமுறைகளையும் அழகுற கலந்து இந்த புதிய விமானப் பயண பாதுகாப்பு வீடியோவானது வெளியிடப்படுள்ளது. இந்த வீடியோவில் பிரதானமாக பரதநாட்டியம் இடம்பெற்றுள்ளது, மேலும், திராவிடக் கோயில்களின் கட்டிடக்கலை அற்புதங்களுக்கு, மனம் மயக்கும் நடனத்தை அழகியலுடன் கலந்து தமிழ்நாடு மாநிலத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாட்டிய சாஸ்திரத்தில் வேரூன்றியிருக்கும் நடனக்கலையான பரதநாட்டியம், சீட்பெல்ட் மற்றும் கேபின் பேக்கேஜ் வழிமுறைகளை அழகியலுடன் தெரிவிப்பதற்கான ஒரு ஊடகமாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது இது தமிழ்நாட்டின் பழங்கால கலைத்திறனுக்கு கௌரவமளிக்கும் வகையிலான ஒரு முயற்சியாகும். இந்த கலைநயமிக்க நடனத்தின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில், நடனத்துறையின் முன்னணி நட்சத்திரங்களான மெக்கான் வேர்ல்ட் க்ரூப்பின் ப்ரசூன் ஜோஷி மற்றும் ஷங்கர் மகாதேவன், பரத்பாலா ஆகியோரின் திறமைகளை ஒருங்கிணைத்திருப்பதன் மூஅம் இந்தியாவின் உள்ளூர் நடனக்கலைஞர்கள் வித்யா அரசு, ருதுஜா மார்னே, மாளவிலி, வர்ஷினி கோபிநாத், சுகன்யா எஸ், மைத்ரேயி முகுந்தன், நிவேதா, அபிநயா, காவியா, கலைச்செல்வி, ஸ்ரீலேகா ஆகியோர் தங்கள் திறமையை மிக அற்புதமாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த காணொலி விமானப் பயணம் குறித்த பாதுகாப்பு வழிக்காட்டுதல்களுடன், இந்தியா முழுவதிலும் இருந்து பிரபலமாக இருக்கும் பிஹு, கதக், கதகளி, மோகினியாட்டம், ஒடிசி, கூமர் மற்றும் கித்தா என ஏழு நடன வடிவங்களையும் ஒருங்கிணைக்கிறது - இவற்றில் ஒவ்வொரு பிரத்யேக நடன வடிவமும் ஒரு குறிப்பிட்ட பாதுகாப்பு வழிக்காட்டுதலை வெளிப்படுத்துகிறது. மேலும் இவை முக்கிய தகவல்களை பயணிகள் ரசித்து பார்க்கும் வகையில் கலாச்சார ரீதியாகவும் வழங்குகின்றன.

ஏர் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி & நிர்வாக இயக்குநர், திரு. காம்ப்பெல் வில்சன் கூறுகையில், "இந்தியாவின் தனித்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் நிறுவனமாகவும், இந்திய கலை மற்றும் கலாச்சாரத்தின் நீண்டகால புரவலராகவும் திகழும் ஏர் இந்தியா நிறுவனம், மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிக்காட்டுதல்களை வழங்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு கலைப் படைப்பை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது. உலகெங்கிலும் உள்ள பயணிகளுக்கு இந்தியாவின் வளமான கலாச்சார பன்முகத்தன்மையை எடுத்துரைக்கும் வகையில் இது அமைந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.. எங்களது விருந்தினர்களுக்கு விமானப் பயணத்தின் போது இந்த இன்ஃப்ளைட் பாதுகாப்பு வீடியோ ஆழமிக்க கருத்துகளையும், முக்கிய தகவல்களையும் பகிர்ந்து கொள்வதாக இருக்கும். மேலும் விருந்தினர்கள் விமானத்தில் இறங்கும் தருணத்திலிருந்து இந்தியாவிற்குள் அடியெடுத்து வைப்பதிலிருந்து அன்புடன் வரவேற்போம்'' என்றார்.

கிராமி விருது பெற்ற இசையமைப்பாளரும் பாடகருமான ஷங்கர் மகாதேவன் இசையமைத்துள்ள இந்த வீடியோ, இந்தியாவின் தனித்துவத்தை படம்பிடிக்கும் வகையில் மனதை மயக்கும் இடங்களில், ஆறு மாதங்கள் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இந்த காணொலி பாதுகாப்பு வழிக்காட்டுதல்களையும், நம்முடைய கலாச்சாரத்தையும் மிகச்சரியான விகித்தத்தில் இணைத்து எடுக்கப்பட்டுள்ளது.

அதிநவீன இன்-ஃப்ளைட் பொழுதுபோக்கு அம்சங்களை கண்டுகளிப்பதற்கான திரைகளைக் கொண்டிருக்கும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏர் இந்தியாவின் ஏ350 விமானத்தில், இந்த விமானப் பயண பாதுகாப்பு குறித்த வீடியோவை முதலில் கண்டுகளிக்க முடியும், ஏர் இந்தியாவின் விமான சேவையில் இடம்பெற்றிருக்கும் இதர விமானங்களில் இது வரும் நாட்களில் இடம்பெறும்.

# திருப்பதி தொகுப்பு சுற்றுலா திட்டத்தின் மூலம் தினசரி 400 பேர் சுற்றுலா செல்லலாம் மேலாண்மை இயக்குநர் சமயமூர்த்தி தகவல்

சென்னை, 03 மார்ச் 2024: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருப்பதி தொகுப்பு சுற்றுலா திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 400 நபர்கள் வரை சுற்றுலா செல்லலாம் என தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தினால் இயக்கப்பட்டு வரும் சுற்றுலா திட்டங்களில் அதிக அளவில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சுற்றுலா பயணம் திருப்பதி ஒரு நாள் சுற்றுலாவாகும். திருப்பதி சுற்றுலா செல்லும் பேருந்து, சென்னை வாலாஜா சாலை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திலிருந்து தினசரி காலை 4.30 மணிக்கு சுற்றுலா பயணிகளை அழைத்து செல்கின்றது.

மேலும் கோயம்பேடு, ரோகினி திரையரங்கிற்கு எதிர்புறம் இருந்தும், பூந்தமல்லி ரோடு திருப்பதி ரோடு இணையும் சந்திப்பு (சங்கீதா ஹோட்டல் அருகில்), திருவள்ளூர் பகுதியில் மணவாளன் நகர் இந்திரா காந்தி சிலை அருகில் ஆகிய இடங்களிலும் திருப்பதி சுற்றுலா செல்லும் பயணிகளை பேருந்தில் ஏற்றிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் திருப்பதி செல்ல வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா வழிகாட்டி

ஒவ்வொரு பேருந்திலும் சுற்றுலா பயணிகளுக்கு ஒரு சுற்றுலா வழிகாட்டி பணியில் ஈடுபடுவார். வழிகாட்டிகள் திருப்பதி சுற்றுலா பயணிகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுற்றுலா பயணத்திற்கான விளக்கங்களை அளிப்பார். சுற்றுலா பயணிகளுக்கு காலை உணவு திருத்தணி ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தில் வழங்கப்படுகின்றது.

சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலா பயணிகள் முடி காணிக்கை விரைவாக செலுத்த உரிய வழிகாட்டுதல்களை வழங்குவார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு அனுமதியாக வழங்கிய விரைவு தரிசன அனுமதி சீட்டின் மூலம் சுற்றுலா பயணிகள் தரிசனம் செய்த பின்னர் சுற்றுலா பயணிகள் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு திருப்பதி லட்டு ஒன்று வழங்கப்படுகின்றது.

கீழ்திருப்பதியில் மதிய உணவும், திருத்தணி தமிழ்நாடு ஓட்டல் உணவகத்தில் இரவு உணவும் வழங்கப்படுகின்றது. திருப்பதி சுற்றுலா முடிந்து சென்னை வாலாஜா சாலை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் சுற்றுலா பயணிகளை கொண்டு சேர்த்து திருப்பதி சுற்றுலா பயணம் முடிவு பெறுகின்றது.

நேரிலோ போனிலோ...

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களுக்கு முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com இணைதள பக்கத்தில் முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

சுற்றுலா குறித்த மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044-25333333, 044-25333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

# ஐஸ்கிரீம் விலை ஏற்றம் ஏன்? - ஆவின் நிர்வாகம் விளக்கம்

சென்னை, 03 மார்ச் 2024: இடுப்பொருட்களின் விலை உயர்வு காரணமாகவே ஆவின் ஐஸ்கிரீம் விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இது இன்றியமையாதது என்றும் ஆவின் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக ஆவின் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தமிழகத்தில் அனைத்து பொதுமக்களுக்கும் ஏற்ற வகையில் தரமான முறையில் ஆவின் நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பால் விற்பனையில் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. ஆவின் நிறுவனம் பல்வேறு வகையான பால் உபபொருட்களை தரமான முறையில் தயாரித்து ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

மேலும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் விரும்பி சுவைக்கும் சுமார் 100 வகையான ஐஸ்கிரீம்களை ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கோடைக்காலத்தில் கூடுதலாக விற்பனையை 20% அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இடுப்பொருட்களின் விலை சற்று உயர்ந்துள்ளதால் தற்பொழுது 4 வகையான ஐஸ்கிரீம் விலையை மட்டுமே ஆவின் நிறுவனம் மாற்றி அமைத்துள்ளது.

முன்னதாக, ஆவின் நிறுவனத்தின் ஐஸ்கிரீம்களின் விலை ரூ.2 முதல் ரூ.5 வரை இன்று முதல் உயர்த்தப்படுகிறது. 65 எம்.எல். எடை கொண்ட சாக்கோபார் ஐஸ்கிரீம் விலை ரூ.20-ல் இருந்து ரூ.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 125 எம்.எல். எடை கொண்ட பால் வெண்ணிலா ஐஸ்கிரீம் ரூ.28-ல் இருந்து ரூ.30 ஆக விலை உயர்த்தப்பட்டுள்ளது. 100 எம்.எல். எடை கொண்ட கிளாசிக் கோன் வெண்ணிலா ரூ.30-ல் இருந்து ரூ.35-க்கும், 100 எம்.எல். எடை கொண்ட கிளாசிக் கோன் சாக்லேட் விலை ரூ.30-ல் இருந்து ரூ.35-க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை ஏற்றம் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த சிறிய விலையேற்றம் இன்றியமையாததாகும். எதிர்வரும் கோடையை முன்னிட்டு அனைத்து பொதுமக்களும் குழந்தைகளும் ஆவின் நிறுவனத்தின் சுவையான ஐஸ்கிரீமை வாங்கி மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் மாணவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளை மையப்படுத்திய 2024 ஆம் ஆண்டின் தேசிய அறிவியல் தினக் கொண்டாட்டம்

சென்னை, 03 மார்ச் 2024: சென்னையில் உள்ள முன்னணிக் கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, பிப்ரவரி 28 அன்று 2024 ஆம் ஆண்டின் தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடியது. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமாக விளங்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வரும், விஞ்ஞானியுமான

டாக்டர் வி.ஜி. வைத்தியநாதன், இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு, அறிவியல் ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மேம்பாடு மற்றும் நிபுணத்துவம் குறித்து உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில், விஞ்ஞான அறிவு மற்றும் ஆய்வுச்சிந்தனையுடன் உள்ள அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர்கள் பெரும்பான்மையோர் பங்கேற்றனர்.



அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின், இயற்பியல் மற்றும் மின்னணுவியல் துறை சார்ந்த மாணவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பறைசாற்றும் முகமாய் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. இதில் லேசர் பாதுகாப்பு அலாரம், பார்வையற்ற நபர்களுக்கான அல்ட்ராசோனிக் (மிகையொலிக் கண்ணாடிகள்) கண்ணாடிகள், ஒரு வழிக் கண்ணாடி, நியோடைமியம் காந்தங்களைப் பயன்படுத்தும் வி6 இயந்திரம், (வி வடிவில் உள்ள ஆறு சிலிண்டர் பிஸ்டன் எஞ்சின்), குரல் கட்டுப்பாட்டில் இயங்கும் சக்கர நாற்காலி, இணைய உலகம் சார்ந்திருக்கும் பொருட்கள் - போன்ற 65 புதுமையான அறிவியல் கண்டுபிடிப்புகள் இடம்பெற்றன. இந்த அறிவியல் ஆய்வுகள் அறிவியலின் எல்லைகளை மறு ஆய்வு செய்யுமுகமாக அமைந்திருந்தன.

தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமாக விளங்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வரும், விஞ்ஞானியுமான டாக்டர் வி.ஜி. வைத்தியநாதன் கூறுகையில், "அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் நடைபெறும் தேசிய அறிவியல் தின விழா, இயற்பியல் மற்றும் மின்னணுவியல் துறைகளில் உள்ள இளம் அறிவியல் விஞ்ஞானிகளின் அபார ஆற்றல் மற்றும் புதுமையான அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தும் தளமாக உள்ளது. மாணவர்களின் அறிவியல் ஆய்வின் மூலம் வெளிப்பட்டுள்ள அர்ப்பணிப்புணர்வும் படைப்பாக்கப் திறனும் எதிர்காலத்தில் அறிவியல் துறையில் ஏற்படப் போகும் மிகப்பெரும் வளர்ச்சியை எதிரொலிக்கிறது. அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர்களிடையே உள்ள அறிவியல் ஆர்வமும் அர்ப்பணிப்புணர்வும் என்னை வெகுவாக நெகிழ வைத்துள்ளது. மேலும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முயற்சிகள் எதிர்கால அறிவியல் உலகத்திற்குத் தேவையான குறிப்பிடத்தக்க தம் பங்களிப்பை வழங்கும் என்று நம்புகிறேன்.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர், டாக்டர் எம். எம். ரம்யா, அவர்கள் கூறுகையில், 2024 ஆம் ஆண்டின் "தேசிய அறிவியல் தின விழா" கொண்டாட்டம் எங்கள் மாணவர்களிடையே அறிவியல் ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புச் சிந்தனைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கல்லூரியின் முன்னெடுப்புகளைப் பிரதிபலிக்கிறது. எங்கள் இளம் விஞ்ஞானிகளின் படைப்பாற்றல் மற்றும் அர்ப்பணிப்புணர்வு கண்டு நாங்கள் மிகவும் பெருமிதமடைகிறோம். மேலும் அவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள் அந்தந்த துறைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

கல்லூரி மாணவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை வெளிப்படுத்தவும் எதிர்கால சந்ததியினரிடையே அறிவியலின் மீதான ஆர்வத்தைத் தூண்டுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இந்நிகழ்வு அமைந்தது. "தேசிய அறிவியல் தின விழா" எங்கள் மாணவர்களின் அசாத்திய சாதனைகளை வெளிப்படுத்துவதோடமட்டுமல்லாமல், கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மாணவர்களிடையே விஞ்ஞான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மிகப்பெரும் கவனம் செலுத்துகிறது என்பதைப் பறைசாற்றுவதாகவும் விளங்குகிறது.

# சாம்சங் கேலக்ஸி எப்15 5ஜி பிரிவில் சிறந்த அமோலட் டிஸ்ப்ளே, 4 தலைமுறை ஆண்ட்ராய்டு மேம்படுத்தல்கள், 5 வருட பாதுகாப்பு புதுப்பிப்புகள் மற்றும் 6000 எம் ஏ எச் பாட்டெரியுடன் உங்களுக்காக

சென்னை, 03 மார்ச் 2024: வாடிக்கையாளர்கள் பேங்க்கேஷ் பேக் அல்லது மேம்படுத்தப்பட்ட போனஸ் ரூ.1000/- ஐப் பெறலாம். இதன் மூலம் கேலக்ஸி எஃப்15 எஃப்15 5ஜியின் நிகரபயனுள்ளவிலை 5ஜியின் நிகர பயனுள்ள விலை 4 ஜிபி +128ஜிபி வகைக்கு ரூ. 11999 ஆகவும், 6ஜிபி +128ஜிபி வகைக்கு ரூ. 13499 விலையில் கிடைக்கும்.

இந்தியாவின் மிகப் பெரிய எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், கேலக்ஸி எஃப்15 5ஜி யை அறிமுகம் செய்வதாக அறிவித்தது, இதுபயனர்களுக்கு அதன் முன்னோடிகளிலிருந்து தனித்து நிற்கும் பல பிரிவு அம்சங்களுடன் சிறந்த ஸ்மார்ட் போன் அனுபவத்தை வழங்குகிறது. கேல்க்ஸி எஃப்15 எஃப்15 5ஜி



ஆனது சிறந்த 6000 எம் ஏ ஹச் பேட்டரி மற்றும் எஸ்ஏமோல்ட் டிஸ்ப்ளே, நான்கு தலைமுறை ஆண்ட்ராய்டு மேம்படுத்தல்கள் மற்றும் ஐந்து வருட பாதுகாப்பு புதுப்பிப்புகள் போன்ற அம்சங்களுடன் தனித்து நிற்கிறது, பயனர்கள் சமீபத்திய அம்சங்களையும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பையும் பல ஆண்டுகளாக அனுபவிக்க முடியும்.

கேலக்ஸி எஃப்15 5ஜி, எங்கள் முதல் 2024 கேலக்ஸி எஃப் தொடர் ஸ்மார்ட் போன், சக்தி வாய்ந்த சாதனங்கள் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறோம். கேலக்ஸி எஃப்15 5ஜி அறிமுகமானது, அர்த்தமுள்ள கண்டுபிடிப்புகளுக்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் குறிக்கிறது, பயனர்கள் தங்கள் முழுதிறனையும் திறக்க உதவுகிறது," என்று சாம்சங் இந்தியாவின் எம் எக்ஸ் வணிகத்தின் துணைத் தலைவர் ஆதித்யாபப்பர் கூறினார்.

"எச் ஏ மோல்ட் டிஸ்ப்ளே, நான்கு தலைமுறை ஆண்ட்ராய்டு மேம்படுத்தல்கள் மற்றும் ஐந்து வருட பாதுகாப்பு அப்டேட்கள், செக்மென்ட்-சிறந்த 6000 எம்ஏஎச் பேட்டரி உள்ளிட்ட பல பிரிவுகளுக்கு மட்டுமேயான அம்சங்களுடன், கேலக்ஸி எஃப்15 5ஜி உடன் வேடிக்கையான பயனர் அனுபவத்தை நாங்கள் உறுதி செய்கிறோம், குறிப்பாக ஜென் இசட்க்கு வேகமான வாழ்க்கையை வாழும் தலைமுறையினருக்கு ," என்று அவர் மேலும் கூறினார்.

# பைக் டாக்சிகளை சட்டப்பூர்வமாக்குவதற்கு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுரை வழங்கியுள்ளது

சென்னை, 03 மார்ச் 2024: பைக் டாக்சிகளின் சட்டப்பூர்வத்தன்மை பற்றிய விவாதத்திற்கு தீர்வு காணும் ஒரு முயற்சியில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (மோர்த்) ஜனவரி 22, 2024 அன்று ஒரு அறிவுரையை வெளியிட்டது. மோட்டார் வாகனங்கள் (எம் வி) சட்டம், 1988 இன் பிரிவு 2(7)ன் படி, ஒப்பந்த வண்டிகளின் வரையறைக்குள் மோட்டார் சைக்கிள்கள் வருவதை இந்த அறிவுரை தெளிவுபடுத்துகிறது.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள் முழுவதும் பைக் டாக்ஸி செயல்பாடுகளுக்கு வரும் போது ஒழுங்குமுறை இணக்கம் குறித்த சர்ச்சை நிச்சயமற்றதாக உள்ளது. கோவா, தெலுங்கானா, ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் அனுமதித்துள்ள நிலையில், மகாராஷ்டிரா மற்றும் டெல்லி மாநிலங்களில் அவை தடை செய்யப்பட்டுள்ளன. மோர்த் இன் ஆலோசனையானது, நிறுவப்பட்டதிலிருந்து உரிமம் மற்றும் ஒழுங்குமுறை நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்ட ராபிடோ போன்ற பைக் டாக்சி ஆபரேட்டர்களுக்கு ஒரு வரவேற்கத்தக்க தலையீடு ஆகும்.

இந்தியாவில் பைக் டாக்சி தொழில் பெருமளவில், மத்திய அரசின் ஆதரவில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் பயனடைகிறது, ஏனெனில் இது அவர்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும், அவர்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் நாட்டின் இயக்கம் சுற்றுச்சூழல் அமைப்பிற்கு பங்களிப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. பைக் டாக்சிகளை பொதுப் போக்குவரத்தின் ஒரு சட்டப்பூர்வ முறையாக அங்கீகரிப்பதன் மூலம், கடந்த தசாப்தத்தில் இந்தியாவின் குறிப்பாக அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் பிரபலமடைந்துள்ள ஒரு செலவு குறைந்த தீர்வானது, இப்போது ஒழுங்குமுறை தடைகள் இல்லாமல் செயல்பட முடியும். பைக் டாக்சிகளுக்கு மோர்த் இன் இந்த நேர்மறையான நிலைப்பாடு, முதல் மற்றும் கடைசி மைல் இணைப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், அடுக்கு 1 மட்டுமின்றி, அடுக்கு 2 மற்றும் 3 நகரங்களுக்கு மலிவு விலை மற்றும் அணுகக்கூடிய பயண விருப்பங்களின் வரம்பை அதிகரிப்பதற்கும் பல சாத்தியமான வழிகளைத் திறக்கிறது.

முன்னர் ஒரு தெளிவற்ற ஒழுங்குமுறை சூழலில் மற்றும் வேறு சில பொது போக்குவரத்து முறைகளின் தொழிற்சங்கங்களிலிருந்து குறிப்பிடத்தக்க பின்னடைவுக்கு வழிவகுத்த பல்வேறு வகையான மிரட்டல்களின் கீழ் செயல்பட்ட பைக் டாக்சி கேப்டன்கள் இப்போது பாதுகாப்பு மற்றும் சட்டபூர்வமான ஒரு உணர்வுடன் செயல்பட முடியும். பைக் டாக்சிகளை சட்டப்பூர்வமாக்குவதற்கு மோர்த் எடுத்துள்ள இந்த நடவடிக்கை, அவர்களின் தொழில் வளர்ச்சி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கான கூடுதல் வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும். இந்த அத்தியாவசிய சேவை வழங்குநர்களுக்கு ஒரு மிகவும் நிலையான மற்றும் நிரந்தர வாழ்வாதாரத்தை உருவாக்குகின்ற உரிமம் தொடர்பான சிக்கல்கள் அல்லது போட்டி நலன்கள் கொண்ட பிற பங்குதாரர்களால் துன்புறுத்தப்படுவதால், பைக் டாக்ஸி கேப்டன்களுக்கு அதிகாரிகளால் அபராதம் விதிக்கப்படுவதிலிருந்தும் இது பாதுகாக்கும்.

இது குறித்து பேசிய ராபிடோ இன் இணை நிறுவனர் பவன்குண்டுபள்ளி, "பைக் டாக்ஸி ஒழுங்குமுறை குறித்து மோர்த் வழங்கிய அறிவுரையை நாங்கள் மனதார பாராட்டுகிறோம், ஏனெனில் இது ஒட்டுமொத்த தொழில்துறைக்கும் மிகவும் தேவையான தெளிவை அளிக்கிறது. அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் பைக் டாக்சிகளுக்கு அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு செயலாக்கத் தொடங்கும் என்று நாங்கள் நம்புகிறோம். நெறிப்படுத்தப்பட்ட இந்த விதிமுறைகள், குறிப்பாக போக்குவரத்து நெரிசல் எளிதாக்குதல் , வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நிலையான போக்குவரத்து ஆகியவற்றின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்ற தாக்கத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துகின்றன. இந்தியாவில் உள்ள பிராந்தியங்கள் முழுவதும் தொடரும் இந்த முக்கியமான பயணச் சவால்களைக் கண்டறிவதற்கும் அவற்றைத் தீர்க்கவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், மேலும் தொடர்ச்சியான கற்றல் மற்றும் கண்டுபிடிப்புகளின் இந்த பயணத்தில் எங்களுக்கு உதவுவதில் அரசாங்கத்தின் ஆதரவிற்கு நம்பமுடியாத அளவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்." என்று கூறினார். ஒரு சுதந்திரமான மூத்த வழக்கறிஞரும் விஷய நிபுணருமான ஏ இசட் பி அண்ட் பார்ட்னர்ஸ் இன் மூத்த பங்காளர் அபிஷேக் அவஸ்தி தனது கருத்துக்களைத் தெரிவித்துக் கூறியபோது " ஒழுங்குமுறை சங்கடத்தை நீக்கும் வகையில் மோர்த் இந்த ஆலோசனையை வெளியிட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள் என்ற வரையறையின் கீழ் இரு சக்கர வாகனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது இந்த அறிவுரையிலிருந்து தெளிவாகிறது. மாநில அரசுகள் இந்த அறிவுரையைப் பின்பற்றி இரு சக்கர வாகனங்களுக்கு ஒப்பந்த வண்டி அனுமதியை பதிவு செய்து வழங்க வேண்டும்." என்று கூறினார்.

பைக் டாக்சி சந்தையில் ஒரு 60% பங்கைக் கொண்டு, ராபிடோ இந்தியாவின் மிகப்பெரிய பைக் டாக்ஸி ஒருங்கிணைப்பாளராக இருக்கிறது. தற்போது இந்தியா முழுவதும் நாளொன்றுக்கு 1 மில்லியனுக்கும் அதிகமான பைக் டாக்ஸி சவாரிகளை எளிதாக்குகின்ற வகையில், குறிப்பாக நாட்டின் வாடகை தொழிலாளர் மக்கள் தொகைக்குள், ராபிடோ ஒரு பெரிய வேலைவாய்ப்பு உருவாக்குபவராக உருவெடுத்துள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து உள்கட்டமைப்பை பயன்படுத்துவதன் மூலம் பயணத்தை மேம்படுத்தும் ஒரு தொலை நோக்குடன், ராபிடோ, மலிவு விலை மற்றும் அனைவருக்கும் அணுகக்கூடிய ஒரே இடத்தில் தீர்வுகளை உருவாக்குவதன் மூலம் நாட்டின் சமூக பொருளாதார கட்டமைப்பில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சாம்சங் கேலக்ஸி ஏ15 5ஜி இன் புதிய மெமரி வெரியன்ட் ரூ 17999 இல் கிடைக்கிறது

சென்னை, 03 மார்ச் 2024: இந்தியாவின் மிகப் பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், இன்று புதிய , 6ஜி பி + 128 ஜி பி கேலக்சி ஏ15 5ஜி ஐ ரூ. 16499 என்ற கவர்ச்சிகரமான விலையில் அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. கேலக்சி ஏ15 5ஜி வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் தேர்வுகளை வழங்கவும். இந்த ஸ்மார்ட்போன் தற்போது 8ஜிபி+256ஜிபி மற்றும் 8ஜிபி+128ஜிபி சேமிப்பு வகைகளில் கிடைக்கிறது மற்றும் மூன்று புத்துணர்ச்சியூட்டும் நீல கருப்பு, நீலம் மற்றும் வெளிர் நீலம். வண்ணங்களில் வருகிறது.

கேலக்சி ஏ15 5ஜி , கேலக்சி ஏ14 5ஜி யின் மேன்படுத்தப்பட்ட ஒரு அம்சமாகும் ஆகும், இது 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் நம்பர் 1 விற்பனையான 5 ஜி ஸ்மார்ட்ஃபோன் ஆகும், கவுண்டர்பாயிண்ட் ரிசர்ச் படி, இந்தியாவில் உள்ள மில்லியன் கணக்கான நுகர்வோரின் முதல் தேர்வாகவும் மற்றும் புதுமைகளை மலிவு விலையில் வழங்குவதில் சாம்சங்கின் திறமையை எடுத்துக்காட்டுகிறது.

கேலக்சி ஏ15 5ஜி ஆனது கேலக்ஸியின் சிக்னேச்சர் டிசைன் தத்துவத்தை பிரீமியம் ஃபீலுக்காக கிளாஸ்டிக் பேனலுடன் ஹேஸ் ஃபினிஷில் வெளிப்படுத்துகிறது. பக்க பேனலில் உள்ள புதிய முக்கிய தீவின் வடிவமைப்பு மற்றும் பிளாட் லீனியர் கேமரா ஹவுசிங் மேம்பட்ட பிடியில் ஒரு தனித்துவமான நிழற்படத்தை உருவாக்குகிறது. கேலக்சி ஏ15 5ஜி ஆனது 6.5-இன்ச் சூப்பர் அமோல்ட் டிஸ்ப்ளே கொண்டுள்ளது, இது விஷன் பூஸ்டருடன் மேம்படுத்தப்பட்டுள்ளது, இது மென்மையான, பிரகாசமான மற்றும் தெளிவான பார்வை அனுபவங்களை 90எச் இசட் புதுப்பிப்பு வீதம் மற்றும் கண் வசதிக்காக குறைந்த நீல ஒளி காட்சியை உருவாக்குகிறது.

கேலக்சி ஏ15 5ஜி ஆனது வி டி ஐ எஸ் உடன் 50எம் பி டிரிபிள் கேமரா அமைப்பைக் கொண்டுள்ளது, இது நிலையற்ற அல்லது அசைவுகளிலிருந்து வீடியோக்களில் தெளிவின்மை அல்லது சிதைவைக் குறைக்கிறது மற்றும் சுயவிவரத்திற்கு தகுதியான செல்ஃபிக்களுக்கான 13 எம் பி முன் கேமராவுடன் உள்ளது.

கேலக்சி ஏ15 5ஜி ஆனது நாக்ஸ் செக்யூரிட்டி இயங்குதளத்துடன் வருகிறது, இது ஆட்டோ பிளாக்கர், பிரைவசி டாஷ்போர்டு, சாம்சங் பாஸ்கி மற்றும் பிற அம்சங்களுடன் பயனர்கள் தங்கள் தரவின் முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்கிறது. மென்பொருள் மற்றும் வன்பொருள் அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பிற்காக தனி டேம்பர்-ரெசிஸ்டண்ட் சேமிப்பகத்தில், பின்கள், கடவுச்சொற்கள் மற்றும் வடிவங்கள் போன்ற உங்களின் முக்கியமான தரவைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட, சிப் மட்டத்தில் கட்டமைக்கப்பட்ட நாக்ஸ் வால்ட் சிப்செட்டையும் சாதனம் கொண்டுள்ளது. சிறந்த தனியுரிமை மற்றும் பாதுகாப்பு அம்சங்களுடன் நிரம்பியுள்ளது, கேலக்சி ஏ15 5ஜி ஆனது 4 தலைமுறைகள் வரையிலான ஓ எஸ் மேம்படுத்தல்கள் மற்றும் 5 ஆண்டுகள் வரையிலான பாதுகாப்பு புதுப்பிப்புகளுடன் எதிர்காலத்தில் தயாராக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது .

கேலக்சி ஏ15 5ஜி ஆனது வாய்ஸ் ஃபோகஸ் போன்ற புதுமைகளுடன் நுகர்வோர் அனுபவத்தை மறுவரையறை செய்கிறது, இது உண்மையிலேயே அற்புதமான அழைப்பு அனுபவத்திற்காக சுற்றுப்புற இரைச்சலைக் குறைக்கிறது. கேலக்சி ஏ15 5ஜி ஆனது கேலக்சி அனுபவத்தை உயர்த்தும் அற்புதமான அம்சங்களுடன் வருகிறது. விரைவு பகிர்வு அம்சம் பயனர்கள் உங்கள் லேப்டாப் மற்றும் டேப், தொலைதூர சாதனங்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கோப்புகள், புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை உடனடியாகப் பகிர உதவுகிறது.

கேலக்சி ஏ15 5ஜி ஆனது சாம்சங் வாலட்டைப் பெறுகிறது, இது நுகர்வோர் ஐடிகளை சேமிப்பதற்கும் கட்டண வசதியை மறுவரையறை செய்வதற்கும் தடையற்ற அனுபவத்தை அனுபவிக்க உதவுகிறது. கேலக்சி ஏ15 5ஜி ஆனது மீடியா டைமென்ஸ்டி 6100+ செயலி மூலம் இயக்கப்படுகிறது மற்றும் தடையற்ற பல்பணி அனுபவத்திற்கு அதிக சக்தி மற்றும் வேகத்தை வழங்குகிறது. கேலக்சி ஏ15 5ஜி ஆனது 5000எம் ஏ எச் பேட்டரியைக் கொண்டுள்ளது, இது இரண்டு நாட்கள் வரை நீடிக்கும் மற்றும் 25டபிள்யூ வேகமான சார்ஜிங்கை ஆதரிக்கிறது மற்றும் உகந்த ஆற்றல் சேமிப்பை உறுதிசெய்ய உங்கள் பயன்பாட்டிற்குத் தானாக மாற்றியமைக்கும் அடாப்டிவ் பவர்-சேவிங் பயன்முறையைக் கொண்டுள்ளது.